பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

13 03 2024 **WEDNESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. செமி கண்டக்டர் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாக மாறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. ஊடகத்துறை சர்வதேச அளவிலான தரத்தை எட்டுவதற்கான வசதிகளை செய்து தர அரசு தயாராக உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் கூறியுள்ளார்.

3. ஹரியானா மாநில அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதம் அம்மாநில சட்டப்பேரவையில் தொடங்கியது.

4. கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் சுமார் ஆயிரத்து 273 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

5. ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் விதர்பா அணி வெற்றிபெற 538 ரன் என்ற இலக்கை மும்பை நிர்ணயித்துள்ளது..

>>>>><<<<<

செமி கண்டக்டர் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாக மாறும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அஸ்ஸாம் மற்றும் குஜராத் மாநிலங்களில் 1 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான மூன்று செமிகண்டக்டர் உற்பத்தி மையங்களுக்கான அடிக்கல் நாட்டு விாாவில் அவர் இன்று காணொலி வாயிலாக பங்கேற்றார்.

இந்த மூன்று உற்பத்தி மையங்களும், நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், புதுமையான கண்டுபிடிப்புகளையும் அதிகரிக்கச் செய்யும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

சுயசார்பு நிலையை நோக்கி நாடு முன்னேறி வருவதை இளைய தலைமுறையினர் கண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

மத்திய அரசின் முயற்சிகள் அவர்களது நம்பிக்கையை அதிகப்படுத்துவதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

இத்திட்டமானது, குஜராத்தில் **Dholera** மற்றும் **Sanand** ஆகிய இடங்களிலும், அஸ்ஸாமில் **Morigaon** எனும் இடத்திலும் செயல்படுத்தப்படுகிறது.

இதையடுத்து, தொழில்நுட்பம் தொடர்பான நிகழ்ச்சி ஒன்றிலும் பிரதமர் பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சியில் மத்திய பல்கலைக் கழகங்கள் ஐஐடி உள்ளிட்ட முன்னணி கல்வி நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேற்கண்ட முயற்சிகள் இளைய தலைமுறையினரின் வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்தும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

**>>>>><<<<<**

தேசிய மாணவர் படையில் மேலும் 3 லட்சம் மாணவர்களை சேர்ப்பதற்கு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார்.

புதிய கல்விக் கொள்கை 2020-ல் தேர்வுப் பாடங்களில் ஒன்றாக என்.சி.சி. அமைந்துள்ள நிலையில் இளையோரை ஊக்கப்படுத்தும் வகையில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன் மூலமாக தேசிய மாணவர் படையில் இரண்டு புதிய அலகுகள் சேர்க்கப்படும் என்றும், முப்படைகளில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் இதில் வழிகாட்டிகளாக பணியாற்ற வாய்ப்புகள் கிடைக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

1948-ஆம் ஆண்டு 20 ஆயிரம் மாணவர்களுடன் அமைகக்கப்பட்ட தேசிய மாணவர் படையில், தற்போது 20 லட்சம் மாணவர்கள் இடம்பெறும் சூழல் உருவாகியுள்ளதாக அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

ஹைதராபாத் விடுதலை தினம் ஆண்டுதோறும் செப்டம்பர் மாதம் 17-ஆம் தேதி கடைபிடிக்கப்படும் என்று உள்துறை அமைச்சகம் அதிகாரப்பூர்வமாக அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

ஹைதராபாத் விடுதலைக்காக போராடிய தியாகிகளை நினைவுகூரும் வகையிலும், இளையோரின் மனதில் தேசபக்தியை ஊட்டும் வகையிலும் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

>>>>><<<<<

ஊடகத்துறை சர்வதேச அளவிலான தரத்தை எட்டுவதற்கான வசதிகளை செய்து தர அரசு தயாராக உள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அனுராக் தாக்கூர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் இன்று நடைபெற்ற சர்தார் வல்லபாய் பட்டேல் வாழ்க்கை வரலாறு தொடர்பான தொலைக்காட்சி நிகழ்ச்சி அறிமுக விழாவில் பங்கேற்ற அவர், திரைப்படத் துறையினர் படப்பிடிப்புகளை எளிதாக மேற்கொள்ளும் வகையில் ஒற்றைச்சாளர அனுமதி திட்டம் செயல்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

சிறப்பான உள்ளடக்கத்தை கொண்ட படைப்புகள், மொழி வேறுபாடுகளை தாண்டி அனைத்து மக்களாலும் ரசிக்கப்படுவதாக அவர் கூறினார்.

சர்தார் வல்லபாய் பட்டேல் போன்ற சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாகத்தை போற்றுவதற்கான தருணம் இது என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும், சிறப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கு இளைய தலைமுறையினரிடையே நமது வரலாற்றுப் பெருமைகளை கற்றுத்தர வேண்டும் என்று திரு. அனுராக் தாக்கூர் கேட்டுக் கொண்டார்.

இந்த விழாவில் பங்கேற்ற பிரச்சார் பாரதி தலைமை நிர்வாக அலுவலர் திரு. கவ்ரவ் துவிவேதி, இளையோரை ஈர்க்கும் விதமான நிகழ்ச்சிகளை தரும் முயற்சிகளில் தூர்தர்ஷன் ஈடுபட்டு வருவதாக தெரிவித்தார்.

>>>>><<<<<

மொரீஷியஸில் பயணம் மேற்கொண்டுள்ள குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, சர்வதேச அடிமைகளின் அருங்காட்சியகத்தை இன்று பார்வையிட்டார்.

போர்ட் லூயி என்னுமிடத்தில் 1849ஆம் ஆண்டு அடிமைகளாக இந்தியா, ஆப்பிரிக்கா மற்றும் ஆசிய நாடுகள் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலிருந்து அடிமைகளை இந்த இடத்திற்கு கொண்டு வந்ததாகவும், அவர்கள் அடிமைகளாக விற்பனை செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அந்த அருங்காட்சியகத்தை பார்வையிட்ட குடியரசுத்தலைவர், அங்குள்ள பார்வையாளர் கையேட்டில் தமது கருத்துக்களை பதிவிட்டார்.

>>>>><<<<<

இந்தியா – மொரீசியஸ் இடையேயான இருதரப்பு பேச்சுவார்த்தை இன்று குடியரசுத்தலைவர் திரு. திரௌபதி முர்மு மற்றும் மொரீசியஸ் பிரதமர் திரு. பிரவிந்த் குமார் ஜெக்நாத் முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

வர்த்தகம், தொழில், கல்வி, முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே மேற்கொள்ளப்படும் திட்டங்கள் தொடர்பாக விவாதம் நடைபெற்று வருகிறது.

>>>>><<<<<

தேசிய கூட்டுறவு ஏற்றுமதி நிறுவனம், கூட்டுறவு இயற்கை நிறுவனம் உள்ளிட்ட கூட்டுறவுத்துறையின் புதிய கட்டிடங்களை அத்துறைக்கான அமைச்சர் திரு அமித்ஷா இன்று திறந்து வைக்கிறார்.

புதுதில்லியில் உள்ள உலக வர்த்தக மையத்தில் நடைபெறும் இந்த நிகழ்ச்சியில் இயற்கை உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதிக்கான வழிமுறைகளையும் திரு அமித்ஷா வெளியிட உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கூட்டுறவுத் துறை மூலம் பாரம்பரிய விதை ஆராய்ச்சி மற்றும் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு புதிய கட்டிடங்கள் உதவிகரமாக இருக்கும் என்று மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>><<<<<

ஹரியானா மாநில அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு தொடங்கியது.

நேற்று மாலை புதிய முதலமைச்சராக பொறுப்பேற்ற திரு. நயாப்சிங் சயினி தலைமையிலான பிஜேபி அரசு, இன்று காலை நம்பிக்கை வாக்கெடுப்பு விவாதத்தை தொடங்கியது.

பிஜேபிக்கு 46 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவு கிடைக்கும் பட்சத்தில் அரசு வெற்றிபெறும் என்ற நிலையில், 48 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக கூறப்படுகிறது.

இன்று காலை பேரவை விவாதம் தொடங்கியதும், ஜனநாயக ஜனதா கட்சியைச் சேர்ந்த 6 சட்டப்பேரவை உறுப்பினர்கள், அந்த கட்சியின் கொறடாவின் ஆணையை மீறி, வெளிநடப்பு செய்தனர்.

தற்போதைய நிலையில் பிஜேபிக்கு 41 உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி மாவட்டங்களில் சுமார் ஆயிரத்து 273 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளை தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

பொள்ளாச்சியில் இன்று நடைபெற்ற அரசு விழாவில் கலந்து கொண்ட அவர், அம்மாவட்டங்களில் 560 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளை திறந்து வைத்து, 489 கோடி ரூபாய் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கும் அவர் அடிக்கல் நாட்டினார்.

மேலும், கூட்டுறவு, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் 57 ஆயிரத்து 325 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை முதலமைச்சர் வழங்கினார்.

>>>>><<<<<

பல்கலைக் கழக மானியக் குழுவின் வழிகாட்டுதலின்படி நாடுமுழுவதும் உள்ள பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் முதல்முறை வாக்காளர்களை ஈர்க்கும் வகையில், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக, திண்டுக்கல் மாவட்டம், சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்த நிகழ்ச்சி மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாகவும் முதல்முறை வாக்கு செலுத்துவது உற்சாகம் அளிப்பதாக உள்ளது என்றும் மாணவி ஒருவர் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மாணவி 38 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

நேபாள நாடாளுமன்றத்தில் பிரதமர் திரு. புஷ்பகமல் தாகெல் அரசின் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று நடைபெறுகிறது.

கடந்த 15 மாதங்களில் மூன்றாவது முறையாக இச்சூழ்நிலையை அந்நாடு எதிர்கொண்டுள்ளது.

நேபாள காங்கிரஸ் மற்றும் நேபாள கம்யூனிஸ் கட்சி இடையிலான கூட்டணி முறிவை அடுத்து, இந்த நம்பிக்கை வாக்கெடுப்பு நடைபெறுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

ரஞ்சிக்கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் விதர்பா அணி வெற்றிபெற 538 ரன் என்ற இலக்கை மும்பை நிர்ணயித்துள்ளது.

மும்பை, வாங்கடே மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் நான்காவது நாளான இன்று, விதர்பா அணி சற்றுமுன்வரை 2 விக்கெட் இழப்புக்கு 104 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, மும்பை அணி முதல் இன்னிங்ஸில் 224 ரன்னும், இரண்டாவது இன்னிங்ஸில் 418 ரன்னும் எடுத்தது.

விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் 105 ரன் எடுத்தது.

>>>>><<<<<

பர்மிங்காமில் நடைபெறும் ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் சாம்பியன் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் பி வி சிந்து, இன்று கொரியாவின் **An se young** -ஐ எதிர்கொள்கிறார்.

>>>>><<<<<

ஐஎஸ்எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கேரளா மற்றும் மோகன் பஹான் அணிகள் மோதுகின்றன.

>>>>><<<<<

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் தில்லி அணியும் – குஜராத் அணியும் மோதுகின்றன.

>>>>>END<<<<<